மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கோரிக்கையின்படி, நவீன தொழில்நுட்பத்துடன் அந்தக் கோயில் சிற்பங்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

170—

மாணவியர் விடுதி

***12468—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தனக்கென்று வாழாமல் தமிழக மக்களின் நலன் ஒன்றே என வாழ்ந்து வந்த எங்கள் குலச்சாமி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகின்றேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் நல்லாட்சி செய்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா என்ற வினாவினை எழுப்பியிருக்கிறார்கள். திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூரில் பிற்படுத்தப் பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

ஏனென்று சொன்னால், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் 1,338 விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 1,112 விடுதிகள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 53 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது இவ்விடுதிகள் அனைத்தும் அரசின் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் மொத்தம் 6 பள்ளி விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 4 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும், 2 ஆதி திராவிடர் நல விடுதிகளும் இயங்கி வருகின்றன. திருவிடைமருதூரில் மொத்தம் 3 பள்ளிகள் மட்டுமே இயங்கி வருகின்றன. திருவிடைமருதூரிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆடுதுறையில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி செயல்பட்டு வருவதால், திருவிடைமருதூரில் மேலும் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இச்சூழ்நிலையில் திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூரில், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் பகுதி, மிகவும் பின்தங்கிய பகுதி. ஏழையெளிய விவசாயிகள் நிரம்பிய பகுதி. 50—க்கும்*

மேற்பட்ட பள்ளி மாணவிகள் வெகு தொலைவிலிருந்து வந்து திருவிடைமருதூர் பள்ளியில் படிக்கின்றார்கள். கிட்டத்தட்ட 1982 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடத்தில் அந்த மாணவியர் விடுதி இயங்கி வருகிறது. அந்த விடுதி ஒரு பழமையான, தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதற்கு ஒரு புதிய கட்டடம் தேவைப்படுகிறது. மாணவர்களுக்கு விடுதி இருக்கின்றது. மாணவிகளுக்கென்று தனியாக விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். அவர், இன்றைக்கு கதிராமங்கலத்தில் நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பதற்காகச் சென்றிருக்கிறார். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அங்கே மாணவியர் விடுதி அமைத்துத் தருவதோடு, அந்த விடுதிக்குக் கட்டடமும் கட்டித் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]